தமிழ் 1 (வினாத்தாள்:5)
Tamil I

72 T I

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

- வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமைவழங்கும் விளாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள்:

பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழல் கால் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது,
படை மடம் படான், பிறர் படை மயக்குறினே.

(அ) பாடலின் திணையையும் துறையையும் விளக்குக.
(ஆ) 'மடம் படுதல்' என்பது இப்பாடலில் எவ்வெப் பொருள்களில் இடம்பெற்றுள்ளதென விளக்குக.
(இ) பாடல் வெளிப்படுத்தும் புறத்திணைப்பண்புகளை எடுத்துக்காட்டுக.

(ii) ''காதலி - தன்னொடு
தவந்தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்!
'மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டும்' என்று,
அறத்துறை மாக்கள் திறத்தின் சாற்றி,
நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும்,
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலை,
பேதைமை கந்தாப் பெரும்பேது உறுவர்
ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலை,
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்.

(அ) இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
(ஆ) அறவழியில் வாழும் துறவியர் உறுதியாகச் சொன்னவைகள் யாவை? அவை எப்படிச் சொல்லப்பட்டுள்ளது?
(இ) கவுந்தியடிகள் கூறிய அறவுரைகள் யாவை?

(24 புள்ளிகள்)

02.பின்வரும் (அ)கவிதையை **அல்லது** (ஆ) உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) பின்வரும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே - அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே.



kalvi.lk

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ. (பாரதி)

சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல். (பாரதி)

தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார். (பாரதி)

புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம்பிறக்குது நேரினிலே. (பாரதி)

முல்லை குறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே. (பாரதி)

(i) இக்கவிதையினூடாக புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயங்களை விளக்குக.
(ii) பாரதியாரது கவிதைகளின் சிறப்பியல்புகளாக புலவர் குறிப்பிடுவன யாவை?
(iii) வெளிப்படுத்த விளைந்த கருத்தை விளக்க புலவர் கையாண்டுள்ள உத்திகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(iv) இக்கவிதையில் காணப்படும் வியப்புச் சுவையினை எடுத்துக்காட்டுக.

(16 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெரு தான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறு கோடியில் கணக்கப்பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக்கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கிறான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள், இந்த வீர மறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு. ''சாதியிலே மறவனாக்கும்'' என்று அதட்டிக் கொண்டு, ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கும் எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி. நாம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப்போல, அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணுகிறார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு.



kalvi.lk

சாதாரணமாகமாடு படுத்திருக்கும்; ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையேகூரையாகக்கொண்டகலைமண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்தஊரிலே சைவசாப்பாட்டைச் சமயா சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக்கிராமத்தான்வணக்கத்தையும்பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு. ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில் - கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்து விடவேண்டாம். கிராம முனிசீபு பிள்ளையவர்கள் வீட்டைப்போல அடக்கமானதுதான்; அவரது மன இருட்டைப்போல இங்கே கர்ப்பக்கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும்; மற்றப்படி ஒன்றுதான். இந்த தேவதை அசைவம். வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும். இல்லாவிட்டால், குடியே முழுகிப் போச்சு. பட்டப் பகலானாலும் கர்ப்பக்கிரகத்தில் கும்மிருட்டு. கூர்மையாகக் கவனித்தால், வெள்ளையும் அதற்கப்புறம் அதன் மையத்தில் ஒரு கறுப்பு. இன்னும் பார்த்தால், விரைத்துப் பார்க்கும் கண்கள். பிறகு இருட்டு திரண்டு திரண்டு பத்தாயிரம் கைகளில் வேலும் சூலமும் தாங்கி, எல்லையையே இமை கொட்டாமல் காத்து நிற்பது தெரியவரும். பட்டப் பகலானாலும் அதைக் கண்டு பயப்படுவோரைக் கண்டால், நாம் அவர்களைக் கேலி செய்யக்கூடாது. நாகரிகம் பட்டுப்போனபிறகு மனித வர்க்கம், ஏதோ எப்போதோ ஒரு காலத்தில், எது பயத்துக்கு வித்தாக இருந்ததோ,அதைப் பயம் போக்க மருந்தாக வசக்கிக்கொள்ள முற்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டு மிரளாமலிருப்பது பிசகு. இருட்டிலே, காட்டிலே மின்னுகிற புலிக் கண்ணைப் பார்த்து அதில் அன்பு பெய்து வைத்துக் கற்பனை பண்ணின காரியம் இந்தப் பேராய்ச்சி. இந்தத் தாயின் மகத்துவத்தைப் பற்றிக் கிராமத்துப் புலவர் பாடுவதைக் கேட்டால், ஆஸ்பத்திரி எதற்கு, மலேரியா, மகமாரி எதிர்ப்பு மருந்து வகை, ஊசிகுத்து முறை எல்லாம் எதற்கு என்றெல்லாம் படும். அந்தவூரில் நிஜமான ஆட்சி பேராய்ச்சியின் ஆட்சிதான். அந்த ஊர்க்காரர்கள் பயப்படுகிறதுபோல, அவ்வளவு கொடுமைக்காரி அல்ல அவள். மகா கண்டிப்புக்காரி.

**(i)** இவ் உரைப்பகுதியில் குறிப்பிடப்படும் கிராமத்தின் அமைப்பு,நிருவாக முறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டுக.

**(ii)** இக்கிராம கோயில்களைக் குறிப்பிட்டு அத்தெய்வ வழிபாட்டு நம்பிக்கைகள் தொடர்பாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுவன யாவை?

**(iii)** கட்டுரையில் புதுமைப்பித்தன் கையாண்டுள்ள மொழிநடைப் பண்பினை எடுத்துக்காட்டுக.

**(16 புள்ளிகள்)**

---

<u>பகுதி II</u>

03. **திருக்குறள், தெரிந்து தெளிதல்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,பின்வருவனவற்றை விளக்குக.

(அ)தக்கவர்களைத் தெரிந்து தெளியுமாறு.

(ஆ)குணம்மிக்க யாவரையும் தெளிதலும் குணங்குற்றங்களை அறிவதற்குரிய வழியும்.

(இ)தெளியப்படாதவர்களை தெளிவதால் ஏற்படக்கூடிய தீங்கும் தெளிவதற்கான எல்லையும்.

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

04. **கம்பராமாயணம் குகப்படலத்தில்,**

(அ)சேனையுடன் கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு சினங்கொண்ட குகன் தன் படைகளைத்திரட்டியதில் வெளிப்படும் பரதனின் பெருமைகளையும்

(ஆ)குகன் தனது படையினருக்குக் கூறிய வீரவார்த்தைகளில் வெளிப்படும் இராமன் மீது கொண்ட பக்தியையும்

(இ) சுமந்திரன் குகனைப் பற்றிப் பரதனுக்குக் கூறிய வார்த்தைகளினூடாக வெளிப்படும் குகனது சிறப்புக்களையும்

(ஈ) பரதனின் நிலை கண்ட குகனின் மனமாற்றத்தையும்

எடுத்துக்காட்டுக.

**(20 புள்ளிகள்)**

05. **தேம்பாவணியில் காட்சிப்படலத்தில்**

(அ) அன்னை மரியாள்

(ஆ) இயேசுவை பார்த்த இடையர்கள்

(அ) அவதாரக் குழந்தை இயேசு

ஆகியோர் பற்றி வீரமாமுனிவர் கூறியவற்றைத் தொகுத்துத் தருக.

**(20 புள்ளிகள்)**

06. **வ.ரா வின் 'சம்பாஷணை ஒருகலை'** எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, மேல்வருவனவற்றை விளக்குக.

(அ)கட்டுரையினூடாக ஆசிரியர் கூறவந்த விடயம்

(ஆ)விடயத்தை நிறுவப் பயன்படுத்தும் வரலாற்றுச் சம்பவங்கள்,உவமைகள்,வினாக்கள்,பேச்சு வழக்கு உத்திகள்

(இ) நல்ல சம்பாஷணை பண்புகள் தொடர்பா ஆசிரியர் தரும் கருத்துக்கள்

(ஈ) காந்தியின் உரையாடலில் காணத்தகும் சிறப்புக்கள்:

**(20 புள்ளிகள்)**

07. **ந.பிச்சமூர்த்தியின் 'நெருக்கடி'** சிறுகதையினை அடிப்படையாக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) சரவணமுத்தின் குடும்ப ஏழ்மை நிலையின் சித்திரிக்கப்பட்டவாறு

(ஆ) சரவணமுத்தின் பக்கத்து வீட்டு பங்காளக்காரர் பற்றிய உமது மனப்பதிவு

(இ) கதையினூடாக வெளிப்படும் படிப்பினைகள்

(ஈ) 'நெருக்கடி' சிறுகதையின் கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு

**(20 புள்ளிகள்)**

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **பாரதியாரின் பெண் விடுதலை** கவிதையில் பாரதி காலத்து பெண்களின் வீழ்ச்சி நிலையும் பெண் விடுதலைக்கான எழுச்சி நிலையும்

(ஆ) **மணிமேகலை காப்பிய அந்தி மாலைப்பொழுதின்** வருணனையில் இடம்பெறும் இயற்கை நிகழ்வுகளோடு தொடர்புடைய பசு,பறவை,மனிதர் செயற்பாடுகள்.

(இ) **சேகுத்தம்பிப் புலவரின் காரணமாலையில்** திரு மக்கமா நாட்டுச்சிறப்புப் பகுதியில் குறிப்பிடப்படும் மக்கமா நாட்டு வளங்களும் இறையோனாகிய அல்லாஹ் வின் அருட் பெருமைகளும்

(ஈ) **ஒரு வெண்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** நாவலில் வெளிப்படும் பிற்போக்குச் சிந்தனைகள்

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

தமிழ் 11 (மாதிரி வினாத்தாள்:05)
**Tamil II**

**72 T II**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

- வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்எழுதுக.

1.1பின்வருவனவற்றுள் உடம்படு மெய் தோன்றிப்புணர்ந்த சொற்கள்,
(1) போர்வை,கோர்வை (2) தெரிவை,அரிவை (3) நாயை,கோவை
(4) நோயை,தேவை, (5) பாவை,தீயை
(……..)

1.2 பின்வருவனவற்றுள் அரையுயிர்கள் இடம்பெறும் சொற்கள்
(1) சேர்வை,தண்ணீர் (2) கொய்யா,அவ்வை (3) சேவை,வேலை (4) ஐயர்,சாமி (5) காகம்,கறுப்பு
(……..)

1.3 வேற்றுநிலை மெய்மயக்கம், உடனிலை மெய்மயக்கம் இரண்டும் இடம்பெற்ற சொல் யாது?
(1) தேன்னைமரம் (2) நிகழ்காலம் (3) புகைவண்டி (4) தேர்க்கால் (5) பாலப்பழம்
(……..)

1.4 பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி அல்லாத சொல்
(1) கடலலை (2) கடலோரம் (3) கடல் மீன் (4) கடற்பாறை (5) கடல் மண்
(……..)

1.5 பின்வருவனவற்றுள்‘கள்’விகுதிஇணையும்போது அவ்விகுதியின் முதல் எழுத்தை இரட்டிக்கச் செய்யும் சொற்கள்
(1) வீடு,கொசு (2) குரங்கு,குட்டி (3) காடு,புல் (4) மரம்,காய் (5) பசு,ஈ
(……..)

1.6 பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலங்காட்டிய சொல்
(1) கூடினான் (2) கூவினான் (3) கூப்பிட்டான் (4) கூட்டினான் (5) கூறினான்
(……..)

1.7 பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம்பெறாத சொல்,
(1) ஓடிகாட்டினார்கள் (2) கைப்பற்றினார்கள் (3) படித்துப்பார்கிறார்கள்
(4) பறந்துபார்த்தார்கள் (5) சித்திரித்தார்கள்
(……..)

1.8 பின்வருவனவற்றுள் ‘இன்’ சாரியை பெற்றுப் புணராத சொல்,
(1) காட்டிற்கு (2) நாட்டிற்கு (3) வீட்டிக்கு (4) வீதியினுகு (5) பாதைக்கு
(……..)

1.9 முதல்வர் அவர்களே தங்கள் வரவு நல்வரவாகுக - இவ்வாக்கியத்தில், ‘தங்கள்’ என்பது,
(1) படர்க்கை தற்சுட்டுப்பெயர் (2) படர்க்கை பன்மைப் பெயர் (3) முன்னிலைப் பன்மைப் பெயர்
(4) படர்க்கை மரியாதை ஒருமைப் பெயர் (5) முன்னிலை மரியாதை ஒருமைப் பெயர்
(……..)



kalvi.lk

1.10 பின்வருவனவற்றுள் காரணவினை அல்லாதது,
(1)செய்யப்பண்ணினேன் (2) செய்துகாட்டினேன் (3) செய்வித்தேன்
(4) செய்துமுடிக்கச்செய்தேன் (5) செய்விப்பித்தேன்

(……..)

1.11 பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர்கள் அல்லாதது,
(1) சுடுபாண்,வெதுப்பகம் (2) சுடுகாடு,வித்துடல் (3) சுடுகுழல்,துப்பாக்கி
(4) சுடுநீர்,மண்பானை (5) சுடுனர்,அமரத்துவம்

(……..)

1.12 பின்வருவனவற்றுள் முறையேஇ 'தல்', 'அல்' விகுதிகள் பெற்றமைந்த தொழிற்பெயர்கள்
(1) போதல்,மோதல் (2) காதல்,சாதல் (3) உண்ணல்,வருந்தல்
(4) வருதல்,இறுகல் (5) கருதல்,பொருதல்

(……..)

1.13 பின்வருவனவற்றுள் விளி உருபு இன்றி பெயர் ஈறு திரிபடைந்துவராத பெயர்ச் சொல்,
(1) தம்பி (2) தங்கை (3) தாய் (4) நீ (5) ஆசிரியர்

(……..)

1.14 தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையும் சொற்கள்,
(1) ஓடு,தேடு (2) போடு,நாடு (3) நனை,கலை (4) செய்,வை (5) அழு,சிரி

(……..)

1.15 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றியவினை இடம்பெற்ற வாக்கியம்
(1) அவன் கவனமாகப் படித்தான் (2) அவன் விரைவாக உழுதான் (3) அவள் அழகாகத் தைத்தாள்
(4) அவள் நிதானமாக நடந்தாள் (5) அவர்கள் முரட்டுத்தனமாக அடித்தார்கள்

(……..)

1.16 ஆசிரியரது தொனியில் ஆவேசமும் முகத்தில் இயலாமையும் விரக்தியும் மாறிமாறி தொன்றின- இவ்வாக்கியத்தில் 'உம்' பின்வருவனவற்றுள் எவ்வறு பயன்பட்டுள்ளது?
(1) என்னுபொருள் (2) எச்சப் பொருள்(3) முற்றுப்பொருள் (4) எதிர்மறை (5) இணைப்புரு

(……..)

1.17 வண்ணவண்ண,சின்னஞ்சிறிய,கன்னங்கரிய என்பவை,
(1) பெயரெச்சங்கள் (2) வினையெச்சங்கள் (3) வினையடைகள்
(4) பெயரடைகள் (5) பண்புப் பெயர்கள்

(……..)

1.18 அறிவும் அன்பும் அடக்கமும் அழகும் தாய்மையும் நிறைந்த அந்தப் பெண் - என்பது,
(1) பெயர்த்தொடர் (2) வினையடைத்தொடர் (3) பெயரடைத் தொடர்
(4) வினைத் தொடர் (5) வாக்கியத் தொடர்

(……..)

1.19 நாளை பாடசாலை விடுமுறை,நான் ஊருக்குச் செல்லவில்லை – எனும் தொடர்களை எதிர்மறைப் பொருளில் இணைக்கப்பயன்படும் பொருத்தமான இடைச்சொல்,
(1) ஆனால் (2) ஆகவே (3) அல்லது (4) ஏனென்றால் (5) எனவே

(……..)

1.20 பின்வருவனவற்றுள் அகராதி ஒழுங்கில் அமையாத சொற்றொகுதி,
(1) வனம்,வானம்,விண்ணர்,வேலை (2) கந்து,காந்து,கிந்து,கெந்து,
(3) தக்கை,தாக்கு,திக்கு துக்கம் (4) இலக்கம்,இலாவகம்,இல்லம்,இலிங்கம்
(5) அகலம்,அகாலம்,இகல்,உலகம்

(……..)

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

02. (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

மனிதர்கள் பூமியில் பிறக்கும்போது எவ்வித குணங்களையும் உள்வாங்காதவர்களாகவே பிறக்கின்றனர். அவர்கள் வளரும் பாதைகள் வெவ்வேறுபட்ட பல்லினச்சூழலில் அமைவதால், அவரவர் குணங்களும் பல்வகைமை சார்ந்ததாக மாறுபட்டு வளர்ந்துவிடுகின்றன. அனியாயங்களைக்கண்டு தட்டிக்கெட்கத்தக்கவர்கள், தவறு விடுகின்றவரிடத்தில் ஒரு இனம்புரியாத உழுவலன்பும் ஒருசமூகப் பொறுப்பும் உள்ளவராகவுமே விளங்குவார்.இவ்வாறான மனித வாழ்கையில் மிகச்சிலர், வாழ்க்கையில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் குறைகளை மாத்திரமே கண்டுபிடித்து, பிறருக்கு வேண்டுமெனறே எடுத்துக் கூறிக்கொண்டே இருப்பார்கள். இவர்கள்தான், ‘மனிதர்களின் நிம்மதியைக் கெடுக்கிறோமே’ என்ற மனிதாபிமான உணர்வு கொஞ்சமேனும் இல்லாதவர்கள். பல மனிதர்களிடம் மற்றவர்களுக்கும் பயன்படும்படியான நிறைகளும் உண்டு, என்பதை இத்தகையோர் ஏற்றுக்கொள்வதில்லை. அந்த நிறைகளைக் கண்டு அவற்றைப் பெரிதுபடுத்தி தூற்றித் திரிவதில் பெரிதும் இலாப நயம் காண்பவர்களாகவே உள்ளனர். நம் சமூகத்தில் இப்படியானவர்கள், உளவளப்பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறார்களே தவிர மிகுந்த பயன் தரக்கூடிய விடயங்களில் பெரிதும் ஈடுபடுவதில்லை. பொதுவாக இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரமயமான வாழ்க்கையில் சமூகத்தில் குறைபாடுகள் இல்லாதவர்களே இல்லையெனலாம். குறைபாடுகள் இல்லாதார் மனிதர்களேயல்லர். ஒருவர்,இன்னொருவரது குறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும் என்றால், அவரைத் தனிமையில் அழைத்து அன்புடனும் பண்புடனும் நிதானமாகவும் அடக்கத்துடனும் உரிமையுடனும் மிகப் பக்குவமாக குறைகளை எடுத்துக் கூறி திருத்துவதற்கான அல்லது திருந்துவதற்கான வினாக்களைக்கேட்டு புத்திமதிகளைக்கூறி, அவர் ஏற்கத்தக்க வகையில் பேசி நடந்து கொள்ள வேண்டும் என்பது, விவேகமானதும் பண்பானதும் நாகரிகமானதுமான செயலாகும். அதை விடுத்து, ஒருபெருஞ் சபையிலே சபையை அடக்கி, தான் அடங்காமல் அவரை மட்டும் ஒரு குற்றவாளி கூண்டிலே நிறுத்தி வினாத்தொடுப்பது போல அவமானப்படுத்துவது, மிக மோசமானதும் வாழ்நாளில் பெரும் அதிர்ச்சியையும் ஆபத்தையும் ஏற்படுத்தும் பெருங் குற்றமாக அமைந்து விடக் கூடும். அதேபோன்று ஒருவருடைய நிறைகளையும் புகழையும் பகிரங்கமாக - வெளிப்படையாக பேசுவதனால் அவர் மேலும் பல நிறைகளையும் வெற்றிகளையும் உயர்வுகளையும் அடைவதற்கு வழி ஏற்படுகின்றது.

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மனித வாழ்க்கைக்கு உடல் ஆரோக்கியம் அவசியமாகும். உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நல்ல உணவும், நல்ல தண்ணிரும், நல்ல காற்றும், உடற் பயிற்சியும், மனப்பயிற்சியும் தேவை. சிறு சிறு ஆரோக்கியக் குறைவுகளுக் கெல்லாம் கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிடுவது நல்லதல்ல. மருந்து களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நமது ஆகாரத்திலேயே நாம் உட்கொள்ளும் காய்கறிகள், மிளகு, சீரகம், வெள்ளைப் பூண்டு, வெங்காயம், சுக்கு, இஞ்சி, மஞ்சள் முதலிய பொருள்களும் கீரை வகைகளும் சிறந்த மருந்துவப் பொருள்களாகும். அவையே பெரும்பாலான சிறு நோய்களை சிறு உபாதைகளைத் தடுக்கும் சக்தி கொண்டவை. அதற்குமேல் அதிகமாக செயற்கை மருந்துளைத் தேடுவது நல்லதல்ல. கூடுமான அளவில் மருந்துகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்று ஒரு பழமொழியும் உண்டு.

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்
கருந்திய தற்றது போற்றி யுனின்”

என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் முன்பு அருந்திய உணவு முழுமையாக செரித்த பின்னர், தக்க அளவில் மீண்டும் உணவு எடுத்துக் கொண்டால் மருந்தே தேவைப்படாது என்பது அக்குறளின் பொருளாகும்.

‘வயிற்றில் பாதி உணவு, மறுபாதியில் பாதி தண்ணிர், மீதம் காற்று என்று இருந்தால் நோயும் வராது, மருந்தும் வேண்டுவதில்லை’ என்று வள்ளலார் கூறுகிறார்.

அதனால் தான் நல்ல உணவு நல்ல தண்ணிர், போதுமான அளவு தேவையான அளவில் சாப்பிட வேண்டும் என்பது அவசியம். நாம் துறவிகள் அல்லர். செயலூக்கத்துடன் செயல்பட வேண்டியவர்கள். ஓயாமல் தொழில் செய்ய வேண்டியவர்கள். எந்த வேலை செய்தாலும் அந்தந்த வேலைகளைச் செய்வதற்கு போதுமான உடல்வலிமை வேண்டும். மனவலிமை வேண்டும். அதற்குத் தேவையான உணவும் பயிற்சியும் அவசியமாகும், அதே சமயத்தில் நமது உடல் ஆரேதக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும். நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி நோய் வந்தாலும் அதை எதிர்த்து எதிர்ப்பு சக்தியை நமது உடலில் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

நமது உடம்பு, இயற்கையின் பகுதி. அது பஞ்சபூத சக்திகளின் பல்வேறுபட்ட சேர்க்கையினால் ஆனது. அந்த சேர்க்கையின் சமநிலை வேறுபாட்டினால், மாற்றங்களினால் நோய்கள் வருகின்றன. உபாதைகள் ஏற்படுகின்றன என்று நமது நாட்டு வைத்தியமுறை கூறுகிறது. அதற்கு மாற்றாக உடல் அமைப்பைச் சமப்படுத்திச் சீராக்க மருந்துகள் கொடுப்படுகின்றன. மருந்துகள் நமது நாட்டு தட்பவெப்பநிலை, நமது உடலமைப்புகள் ஆகியவைகளுக்கேற்ப, இயற்கையோடும் நமது உணவு முறைகளுடனும் இணைந்து மருந்துகள் நோய்களுக்கேற்ற வகையில் கொடுப்பது நல்லது.

நோய்களைக் கண்டறிவதற்கு அந்தந்த நோய்க்கான காரணங்களையும் மூலக்கூறுகளையும் ஆராய்ந்து அந்த நோயைக் களைவதற்கு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

“நோய்நாடி நோய் முதல் நாமு, அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்ப செயல்”

என்பது வள்ளுவர் வாக்காகும்.

நோய் இன்னது என்று அறிந்து அந்த நோய்க்கான மூல காரணத்தை அறிந்து அந்த நோயைத் தணிப்பதற்கான வழியை அறிந்து அதற்கேற்றபடி அந்த நோயைத் தீர்க்க வழிகாண வேண்டும் என்பது அதன் கருத்தாகும்.

நவீன மருத்துவ முறைகளில் பல சிறந்த ஆய்வுகள் மூலம் ஆய்வுக்கூடங்கள் மூலம், கருவிகள், உபகரணங்கள் மூலமும் நோய்களும், நோய் மூலங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

வந்த நோய்களை நிறுத்துவதற்கு, தீர்ப்பதற்கு மருந்துகள் கொடுப்பதும் அத்துடன் நோய்கள் வராமல் தடுப்பதும் அவசியமாகும். அதுவே மேலான வழியுமாகும். உடலையும், வீட்டையும், நாம் பணிபுரியும் இடத்தையும ஊரையும், தெருவையும் குறிப்பாக நம் மனத்தையும் நாட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் உண்ணும் உணவும், பருகும் நீரும், காற்றும் சுத்தமாக இருக்கவும் நாம் இடைவிடாமல் முயற்சிக்க வேண்டும்.இயற்கையோடு இணைந்து நமது வாழ்க்கை முறைகளைச் சீராக்கினால், சமப்படுத்தினால் நோய்கள் குறையும் மருந்தின் தேவைகள் குறையும்.



kalvi.lk

உடல் ஆரோக்கியத்தைப் பெருக்கி, நோய்களை வருமுன் தடுத்து, நோய்களைத் தாங்கி முறிக்கும் சக்தியை உடலில் வளர்த்து உடலைப் பாதுகாப்பது அவசியம். அதற்கு மருந்து வகைகளைக் குறைப்பது என்பதும் நல்ல மருந்தாகும்.

(i) நம் உணவுப் பழக்க வழக்கம் பற்றி வள்ளுவரும் வள்ளலாரும் கூறுவன யாவை?
(ii) சிறு நோய்களையும் உபாதைகளையும் தடுக்கும் சக்தி கொண்டவையாக எவற்றை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?
(iii) நாம் துறவிகள் போலல்லாது செயலூக்கத்துடன் ஓயாமல் தொழில் செய்ய வேண்டிய உடல்வலிமையும் மனவலிமையும் பெறுவதற்கு யாது செய்ய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
(iv) நோய்கள் குறைத்து மருந்தின் தேவைகள் குறைவதற்கும் எவற்றைச் செய்யவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது?

**(13+12=25 புள்ளிகள்)**

03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) போதைப் பொருள் பாவனை: சவால்களும் தீர்வுகளும்.
(ஆ) மாணவர்களின் கற்றல் விருத்தியில் ஊடகங்கள்.
(இ) ஈழத்துப் போர்க்கால இலக்கியங்கள்.
(ஈ) தற்கால தமிழ் சினிமாக்களின் சமூகப் பொறுப்பு.
(உ) தற்கால இலங்கை விவசாயிகளின் வாழ்வியல்.

**(25 புள்ளிகள்)**

## பகுதி II

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)**

04. (அ) சங்க காலப் புறத்திணை இலக்கியங்கள் யாவை?
(ஆ) சங்க கால இலக்கியங்களின் தனித்துவப் பண்புகள் ஐந்தினை ஏற்ற எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
(இ) இக்கால இலக்கியங்கள் சங்கமருவிய கால இலக்கியங்களிலே செல்வாக்குச் செலுத்திய வாற்றினைப் பரிசீலிக்குக.

**(15 புள்ளிகள்)**

05. (அ) விஜயநகர - நாயக்கர்காலத்தில் வழக்கிலிருந்த சிற்றிலக்கிய வடிவங்கள் யாவை?
(அ) விஜய நகர - நாயக்கர் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பற்றிச் கருத்துரை வழங்குக.
(இ) அருணகிரிநாதரின் கவியாற்றலை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

06. (அ) ஐரோப்பியர் வருகையால் இலங்கைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட புதியமாற்றங்களை விளக்குக.
(ஆ) பழைய இலக்கிய வடிவங்களுள் புதிய பொருள் மரபினைப் பாடும் மரபு 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வரலாற்றினை விளக்குக.
(இ) "இலக்கிய வரலாற்று எழுதுமுறை ஒன்று 19 ஆம் நூற்றாண்டிலே துளிர்விடத் தொடங்கியது" ஆராய்க.

**(15 புள்ளிகள்)**

07.பின்வருவோரில் யாரேனும் **இருவர்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
(அ) கூழங்கைத் தம்பிரான்
(ஆ) மாதகல் மயில்வாகனப்புலவர்
(இ) உடுப்பிட்டி அ.சிவசம்புப் புலவர்
(ஈ) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசகர்

**(15 புள்ளிகள்)**

08.(அ) பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(i)** நாய் வாலை ஆட்டும்போது மகிழ்ச்சியாய் இருக்கும் - எனும் வாக்கியம் **இருவேறு பொருள்**களை வெளிப்படுத்துமாறு இரண்டு வாக்கியங்கள் எழுதிக்காட்டுக.

**(ii)** பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.இலங்கையில் காணாமலாக்கப்பட்டோருக்கான தீர்வுகேட்டு இன்று பூரண கடையடைப்பினால் தமிழ்ப்பிரதேச எல்லாப் பாடசாலைகளும் மூடப்பட்டது.

**(iii)** பின்வரும் பிரதேச கிளைமொழி, நகர்புறமொழி வாக்கியங்களை நியமத்தமிழில் எழுதிக்காட்டுக.
**(a) பிரதேச கிளைமொழி**: "யாரைத் தேடுதிய? ஓ! அவுகளா?,ஏலே காத்தான் நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப்போ"
**(b) நகர்புறமொழி:** "றொம்ப டல்லா இருக்கே சார்"

**(iv)** பின்வரும் வாங்கியத்திலுள்ள புறச்சுட்டு,வினையடை,வியங்கோள் வினை என்பவற்றை எடுத்துக்காட்டுக.
**(a)** கிட்டப்போய் மெல்லக் குனிந்து இடுக. **(b)** இல்லையேல் உம்பாடடில் செல்க.

**(v)** பின்வரும் வாக்கியத்தொடர்களிலுள்ள முதல்வினைகளையும் துணைவினைகளையும் எடுத்துக்காட்டுக.
(a) கீழ்திசையின் மீதில் உதித்துவிட்டான் (b) இருட்கதவை உடைத்தெறிந்தான்

(ஆ)பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி சிறுகுறிப்பு வரைக.
**(i)** இடைநிலை மெய்ம்மயக்கம்
**(ii)** அகப்புணர்ச்சி
**(iii)** பொது வினை

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page